# கருத்தரங்கு அறிக்கை

இம்மாகுலேட் மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறையில் **17.04.2024** அன்று '**பன்முக நோக்கில் சங்க இலக்கியம்**' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கு செயலர் அன்னை சகாயம் அவர்கள் தலைமையில் கல்லூரியின் முதல்வர் மற்றும் மனித வள அலுவலர் முன்னிலையில் துறைத்தலைவர் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது. இந்நிகழ்வானது இறை வாழ்த்து பாடலுடன் தொடங்கப்பட்டது .இதில் சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரியின் தமிழ்த் துறையின் தலைவர் **முனைவர்.மகாலட்சுமி** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மேலும் இளங்கலைத்தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவியர்கள் **நவநிதி, அபிதா, சுஷ்மிதா, சினேதா, திரிஷா, அஸ்வதி** ஆகியோர் கட்டுரை வாசித்தனர். சிறப்பு விருந்தினர் அவர்கள் கருத்தரங்கின் தலைப்பு தொடர்பான சிறந்த கருத்துக்களை மாணவர்களுக்கு வழங்கினார் இந்நிகழ்வினை திருமதி மீனா குமாரி அவர்கள் தொகுத்து வழங்கினார் திருமதி கலையரசி அவர்கள் வரவேற்புரை வழங்க திருமதி விக்னேஸ்வரி அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். இறுதியாக நாட்டுப் பண்ணுடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.